( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-03

# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

(01) 

A B C D E

மேலேயுள்ள உருக்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை ஒரு கூட்டமாகவும் வகைப்படுத்தலாம். அக்கூட்டத்தைத் தெரிவு செய்க.

(1) BCE, AD (2) ACE, BD (3) ADB, CE

(02) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சிகளின் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் விடை,



A B C D E

(1) E, B, D, C, A (2) C, D, A, E, B (3) E, A, D, B, C

(03) பாலன், ரவி ஆகிய இருவரிடமும் 33 நெல்லிக்கனிகள் இருந்தன. ரவியை விட பாலனிடம் 7 நெல்லிக்கனிகள் கூடுதலாக இருந்தன. அதன்படி, ரவியிடம் இருந்த நெல்லிக்கனிகள் எத்தனை?

(1) 12 (2) 14 (3) 13

(04) எழுத்துக்கள் பிழையில்லாத வாக்கியத்தை தெரிவு செய்க.

(1) பரவைகள் வாணத்தில் பறந்தண. (2) மல்லிகைப் பூ மணமுள்ளது. (3) வேழைக்காரி வேழை செய்தால்.

(05) விறகடுப்பில் எப்போதும் இருப்பது,

(1) விறகு (2) கறி (3) சாம்பல்


(06) துறைமுகம் என்பது,


(1) கப்பல் நிறுத்தும் இடம் (2) மீன் பிடிக்கும் இடம் (3) கப்பல் கட்டும் இடம்

(07) 1ஆம், 2ஆம் உருக்களுக்கிடையிலுள்ள தொடர்பின்படி, 3ஆவது உருவிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



உரு 1 உரு 2 உரு 3

(1)  (2)  (3) 

(08) 


வட்டம், முக்கோணம், சதுரம் ஆகிய மூன்று வடிவங்களுக்கும் பொதுவான இலக்கங்களின் கூட்டுத்தொகை,

(1) 26 (2) 20 (3) 15


(09) ரவி, கவிதா, தர்சன், மீனா ஆகியோர் கணிதப் பாடப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். மீனாவை விட 8 புள்ளிகள் கூடுதலாக ரவி பெற்றதுடன், தர்சன் கவிதாவை விட 4 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தான். ரவியும் தர்சனும் சமனான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதன்படி, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்,

(1) கவிதா (2) தர்சன் (3) மீனா




(10) பச்சை, மஞ்சள், சிவப்பு, கறுப்பு, நீலம், பச்சை, மஞ்சள், ......... என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் ஒரு தொடராகப் பொருத்தப்பட்டுள்ளன. 1 ஆவது மின்குமிழ் பச்சை நிறம் ஆகும். அதன்படி, 68 ஆவது மின்குமிழின் நிறம்,

(1) கறுப்பு (2) மஞ்சள் (3) சிவப்பு

kalvi.lk

(11) 


அருகே தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(12) பயிர் நிலங்களில் பயிர்த் தாவரங்களுக்கு இடையில் காணப்படும் சில களைத் தாவரங்கள் அதிகளவு வித்துக்களைத் தோற்றுவிக்கின்றன. இதனால் களை பூண்டுகள் அதிகளவில் பயிர் நிலங்களில் காணப்படுகின்றன. எனவே இக்களைத் தாவரங்களை அழிப்பது கடினமானது.

மேலேயுள்ள தகவலின்படி, தீர்மானிக்கக்கூடியது,

(1) சில களைகள் வேகமாக பரவுவதனால் அவற்றை அழிப்பது கடினமாகும்.
(2) பயிர் நிலங்களில் களைத் தாவரங்கள் வேகமாக பரவுவதனால் அவற்றை இலகுவாக அழிக்கலாம்.
(3) பயிர்த் தாவரங்கள் அதிகளவு வித்துக்களை தோற்றுவிக்கின்றன.

(13) 

உருவத்தை அவதானித்து வெற்றுக்கூட்டிற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(14) 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற இலக்கங்களுக்குள் சிலவற்றைப் பயன்படுத்தி "NOUNS" என்ற சொல் எழுதப்பட்டுள்ளது. அதன்படி, அச்சொல் எழுதப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவு செய்க.


(1) 8 1 6 3 8 (2) 7 2 5 9 4 (3) 6 3 8 6 1

(15) ரூபாய் 5.00 நாணயக் குற்றி, ரூபாய் 2.00 நாணயக் குற்றி என்பன சமனான தடவைகள் வீதம் மேலே சுண்டிவிடப்பட்டன. ஒவ்வொரு நாணயக் குற்றியினதும் ஒரு பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாணயக் குற்றி | முன் பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை | பின் பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ரூபாய் 5.00 நாணயக் குற்றி | 7 | A |
| ரூபாய் 2.00 நாணயக் குற்றி | B | 9 |

மேலேயுள்ள தகவல்களுக்கேற்ப, அட்டவணையிலுள்ள A, B ஆகிய வெற்றிடங்களுக்கான எண்களாக இருக்கக்கூடியது?

(1) A - 10, B - 8 (2) A - 9, B - 6 (3) A - 6, B - 5

(16) 


அருகே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவுக்கும் தனித்தனியே பெறுமதி உண்டு. அவ்வுருக்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகை நிலைக்குத்தாகவும் கிடையாகவும் தரப்பட்டுள்ளன. அதன்படி,

 இவ்வுருவின் பெறுமதி,

(1) 4 (2) 5 (3) 3

(17) திவ்யா ஓரிடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தனது இடதுக் கைப்பக்கம் திரும்பி நடந்து மீண்டும் இடதுக் கைப்பக்கம் திரும்பி நடந்தாள். அதன்படி, அவள் பயணம் செய்த திசைகளாவன,

(1) கிழக்குத் திசை, தெற்குத் திசை (2) கிழக்குத் திசை, வடக்குத் திசை (3) மேற்குத் திசை, தெற்குத் திசை

(18) கீழே காணப்படும் வினாவில் தந்துள்ள மூன்று வசனங்களுக்கும் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்க.

* பூவில் தேனை உறிஞ்சிக் குடிக்கும். * சில நேரம் எம்மைத் தீண்டும். * எமக்குத் தேனைப் பெற்றுத் தரும்.

(1)  (2)  (3) 

(19) கீழே காணப்படும் வினாவில் முதலாவதாக உள்ள இரு சொற்களிடையே ஏதோ ஒரு விதத்தில் நெருங்கிய தொடர்பு உள்ளது. அவ்வாறான நெருங்கிய தொடர்புள்ள இரு சொற்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

**கோழி - முட்டை**

(1) கழுதை - பாரம் (2) மாடு - புல் (3) பசு - பால்

(20) மாம்பழத்தின் விலை ரூபாய் 24.00 ஆகும். கொய்யாப்பழங்கள் மூன்றை ஒரு மாம்பழத்தின் விலைக்கு வாங்க முடியும். தோடம்பழம் ஒன்றின் விலை மாம்பழத்தின் விலையில் அரைவாசியாகும். அதன்படி, ஒவ்வொரு பழத்தின் விலையும் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதினால் கிடைப்பது,


(1) தோடம்பழம் - கொய்யாப்பழம் - மாம்பழம் (2) கொய்யாப்பழம் - தோடம்பழம் - மாம்பழம்
(3) மாம்பழம் - தோடம்பழம் - கொய்யாப்பழம்

kalvi.lk




(21) 2008 ஆம் ஆண்டு நெட்டாண்டானால் 29 நாட்களைக் கொண்ட பெப்ரவரி மாதங்கள் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும்?

(1) 2000 உம் 2016 உம் (2) 2005 உம் 2018 உம் (3) 2002 உம் 2012 உம்

(22)




தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை A எனும் திசையில் இருந்து பார்த்தால் புலப்படும் முறை,

(1)

(2)

(3)


(23) பாடசாலையொன்றில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பற்றிய தகவல்கள் இவ்வரைபில் தரப்பட்டுள்ளன. தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 60 ஆகும்.

| | |
|---|---|
| **ஆண் பிள்ளைகள்** | ● ● ● ● |
| **பெண் பிள்ளைகள்** | ● ● ● ● ● ● |

இவ்வட்டவணையின்படி, ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் எத்தனை பேர் அதிகமாக உள்ளனர்?

(1) 12 (2) 20 (3) 16


(24) கீழே தரப்பட்டுள்ள கூற்று பிழையானதற்கான காரணத்தைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

சிவகுமாரின் மரக்கறித் தோட்டத்தில் மரவள்ளி காய்கள் கொத்துக்கொத்தாகத் தொங்கின.

(1) மரக்கறித் தோட்டத்தில் மரவள்ளி நடுவதில்லை. (2) மரவள்ளி மரத்தில் காய் உருவாவதில்லை.

(3) மரவள்ளிக் காய்கள் கொத்துக்கொத்தாக காய்ப்பதில்லை.

(25)




இவ்வுருவில் எண்கள் ஒரு கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூட்டிற்கு பொருத்தமான எண்,

(1) 36 (2) 28 (3) 41

(26) பின்வரும் எண்களுக்கிடையிலான தொடர்புகளைக் கவனிக்குக.

□ x △ = ✳ △ + △ = □ □ x □ = 16

மேலேயுள்ள தொடர்புகளுக்கேற்ப ✳ இவ்வுருவின் பெறுமதி,

(1) 12 (2) 10 (3) 8

(27) பெட்டியொன்றில் 5 நீல நிறப் பந்துகளும், 3 மஞ்சள் நிறப் பந்துகளும், 2 வெள்ளை நிறப் பந்துகளும் உள்ளன. பெட்டியை பார்க்காமல் கட்டாயமாக மஞ்சள் நிறப் பந்து ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பெட்டியிலிருந்து எடுக்க வேண்டிய பந்துகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 7 (2) 8 (3) 3

(28) முதலில் காணப்படும் உருவைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த இரு உருக்களை தெரிவு செய்ய வேண்டும்,


A

B

C

D


(1) C உம் B உம் (2) A உம் D உம் (3) C உம் D உம்

(29) ரூபாய் 2.00 நாணயக் குற்றிகளும், ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளும், ரூபாய் 10.00 நாணயக் குற்றிகளும் மூன்று வீதம் அடுக்கி வைக்கப்பட்டுள்ள முறை கீழே காட்டப்பட்டுள்ளது.




குமார் அவற்றில் ஒரு குவியலில் இரண்டு நாணயக் குற்றிகளை எடுத்தான். அதன்படி, மீதமுள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதியாக இருக்கக்கூடியது,

(1) ரூபாய் 45.00 (2) ரூபாய் 38.00 (3) ரூபாய் 41.00

kalvi.lk

(30) சியானா முதல் நாள் 4 மாம்பழங்களை பறித்தாள். அதன் பின் ஒவ்வொரு நாளும் முந்திய நாள் பறித்த மாம்பழங்களை விட 2 கூடுதலாக பறித்தாள். அதன்படி, அவள் 3 நாட்களும் பறித்த மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 16 (2) 18 (3) 12

(31) கீழுள்ள எண்களில் எண் கோலமொன்றை உருவாக்க அகற்ற வேண்டிய எண்கள்,

| 3 | 7 | 11 | 13 | 15 | 19 | 21 | 23 |

(1) | 11 | 23 | (2) | 7 | 15 | (3) | 13 | 21 |

(32) வகுப்பொன்றில் 14 மாணவர்களில் 9 பேர் கிரிக்கெட் விளையாட்டை விரும்பும்போது 10 பேர் கரப்பந்து (வொலிபோல்) விளையாட்டை விரும்புகின்றனர். எனின், இரு விளையாட்டுக்களையும் விரும்புபவர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 5 (2) 4 (3) 6

(33) 100m ஓட்டப் போட்டியொன்றின் தகவல்களை A, B, C, D என நான்கு கூற்றுக்கள் மூலம் தரப்பட்டுள்ளன.

**A** - பாலாவிற்கு பின் மூன்று பேர் போட்டியை நிறைவு செய்தனர்.

**B** - பாலாவிற்கு முன் கதிர் போட்டியை நிறைவு செய்தான்.


**C** - ஆறு போட்டியாளர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.


**D** - ரவிக்கு பின் ஐந்து பேர் போட்டியை நிறைவு செய்தனர்.

அதன்படி, ஓட்டப் போட்டியில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் ஆகிய இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் முறையே,

(1) பாலா - கதிர் - ரவி (2) ரவி - கதிர் - பாலா (3) ரவி - பாலா - கதிர்

(34)




A எனும் செவ்வக வடிவக் கார்ட்போர்ட் அட்டையிலிருந்து வெட்டக்கூடிய B வடிவிலான வட்ட வடிவக் கார்ட்போர்ட் அட்டைகளின் எண்ணிக்கை,

(1) 14 (2) 16 (3) 12

(35) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கடலின் நீரை குடிக்கின்றாய்
கறுத்து வானில் உயர்கின்றாய்
மின்னி முழங்கி நிற்கின்றாய்
மேனி எங்கும் பொழிகின்றாய்


இப்பாடல் எதைப் பற்றி கூறப்படுகிறது,


(1) மழையைப்பற்றி

(2) கடலைப்பற்றி

(3) மேகத்தைப்பற்றி

(36) பின்வரும் பொருட்களின் விலைகளை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.

 → ரூபாய் 36.00

 → ரூபாய் 64.00

இவ்விலைகளின்படி, பென்சில் ஒன்றின் விலை,

(1) ரூபாய் 10.00 (2) ரூபாய் 8.00 (3) ரூபாய் 12.00


(37) ஒரு குறித்த ஆண்டின் மே 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும். அதன்படி, அவ்வாண்டின் ஜுன் 8 ஆம் திகதி என்ன கிழமை,

(1) புதன்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) வியாழக்கிழமை

(38) ஒரு பேருந்தில் இருவர் வீதம் அமரத்தக்க 12 பயணிகள் ஆசனங்களும், 4 பயணிகள் வீதம் அமரத்தக்க 3 பயணிகள் ஆசனங்களும் உள்ளன. பேருந்தில் 42 பயணிகள் ஏறினர். அதன்படி, பேருந்தில் நிற்க வேண்டிய பயணிகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 7 (3) 6


(39)





இத்திண்மத்திலுள்ள முகங்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 7 (2) 8 (3) 9

(40) 3 இலிருந்து 8 வரை இலக்கங்கள் இடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் எதிரெதிர் முகங்களிலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 11 ஆகும். அதன்படி, அத்தாயக்கட்டையைத் தெரிவு செய்க.

(1) 


(2) 


(3) 


kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-03

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - *** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  - *** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

---

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

பேருந்து கண்டி பாரதி வித்தியாலயத்திலிருந்து புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் கடுகண்ணாவ மலைத்தொடர் தென்படத் தொடங்கியது. கிழக்கு வானில் சூரியன் தகதகவென மின்னியபடி அம்மலைத்தொடர்களுக்கு இடையே எட்டிப் பார்த்தான். தூரத்தே தெரியும் வீதிகள் பாம்பு வளைந்து செல்வதுபோலக் காட்சியளித்தன. இவ்வாறாக, நாம் இயற்கையின் விந்தையையும் அழகையும் இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தோம்.

(i) பேருந்து எங்கிருந்து புறப்பட்டது? ..............................................................

(ii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மலைத்தொடரின் பெயர் என்ன? ..............................................................

(iii) தூரத்தில் தெரியும் வீதிகள் எவ்வாறு காட்சியளித்தன? ..............................................................

(iv) "புதுமைகளையும்" என்பதைக் குறிக்கும் சொல்லை இனங்கண்டு எழுதுக. ..............................................................

(v) "வந்தடைந்தோம்" என்பதைப் பிரித்து எழுதுக. ..............................................................

**(02) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும். :- ..............................................................

**(03) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை என்பவற்றின் தொடர்பு சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( ✗ ) எனவும் எதிரேயுள்ள அடைப்பினுள் அடையாளமிடுக.**

(i) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளது. ( )

(ii) நான் எனது தம்பியுடன் பாடசாலையை நோக்கி நடந்தோம். ( )

(iii) காகம் முட்டைகளிட்டுக் குஞ்சுகள் பொரித்தது. ( )

(iv) எனது வீட்டுத்தோட்டத்தில் மலரும் ஒவ்வொரு பூவும் வாசனை மிக்கவை. ( )

**(04) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவை எழுதுக.**

(i) கி.மு :- .............................................. (ii) இ. போ. ச :- ..............................................

**(05) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

யானை பிளிறும் அதுபோல ஆந்தை ..............................................................

**(06) பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக எழுதுக.**

- காலையில் பத்திரிகை கிடைக்கவில்லை.
- நான் பத்திரிகை வாங்கக் கடைக்குச் சென்றேன்.

..............................................................

**(07) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இரட்டைக்கிளவியை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(i) கடற்கரைக் காற்று ....................... ( சுளுசுளு / குளுகுளு ) வென்று இதமாக இருந்தது.

(ii) ஓடையில் நீர் ....................... ( சலசல / கலகல ) வென்று ஓடியது.

(iii) கடுமையான குளிரினால் உடல் ....................... ( கடகட / நடுநடு ) ங்கியது.

**(08) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான இணைமொழியை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

( இன்பதுன்பம் , ஏழை எளியவர் , கண்ணுங்கருத்து )

(i) நாம் .............................................. களுக்கு உதவுதல் சிறந்த பண்பாகும்.

(ii) பொதுச்சொத்துக்களை .............................................. மாக பாதுகாப்பது எமது கடமையாகும்.

(iii) ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் .............................................. மாறி மாறி வரலாம்.

katvi.lk

(09) "தூக்கணாங்குருவி" என்ற சொல்லிலுள்ள உயிர்க் குறிகளின் பெயர்களை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

..........................................................................................................................................................

(10) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) look / picture / at / Please / the :- ..........................................................................................

(ii) my / I / country / love :- ..................................................................................................

(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லினதும் கீழ்க் கோடிடுக.

(i) She .................. ( like / likes ) to eat bread. (ii) I am ................. ( going / go ) to the library.

(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) I am hungry :- ........................................................ (ii) You may fall :- ........................................................


(13) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) பு(ட்)டுவ :- ........................................................ (ii) புஸ்தகாலய :- ........................................................

(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

எனக்கு தேநீர் வேண்டாம். :- ..........................................................................................

(15)




(i) இக்கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..........................................

(ii) அவ்வாறு தயாரிக்கப்பட்ட திண்மத்திற்கு உதாரணம் ஒன்று தருக. ..........................................

(16) 8109, 8901, 8091 என்ற மூன்று எண்களிலும் சிறிய எண்ணை சொற்களில் எழுதுக. ..........................................


(17) 3, 10, 17, 24, 38 எண் கோலமொன்றை அமைப்பதற்கு இவ்வெண்வரிசைக்குச் சேர்க்கப்பட வேண்டிய எண் யாது? ..................

(18)



இவ்வுருவில் $\frac{1}{2}$ ஐ நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை யாது? ..........................................

(19)





இவ்வுருவின்படி, கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.

(i) பூ இருப்பது பேனைக்கு .................................................... திசையிலாகும்.

(ii) மேசை இருப்பது கதிரைக்கு .................................................... திசையிலாகும்.

(20)




இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்தின்படி, 7 கழிந்து 5 நிமிடங்கள் ஆவதற்கு இன்னும் எத்தனை நிமிடங்கள் உள்ளன? ....................................................

(21)

$$\begin{array}{r} 3\quad 5\quad 6 \\ +\ \square\quad \square\quad 2 \\ \hline 9\quad 4\quad 8 \\ \hline\hline \end{array}$$

அருகில் காட்டப்பட்டுள்ள வெற்றுக்கூடுகளுக்குப் பொருத்தமான இரு இலக்கங்களையும் வெற்றுக்கூடுகளின் உள்ளேயே எழுதுக.

(22)




நாணயக் குற்றியொன்று மேலே சுண்டிவிடப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை 15 ஆகும். B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை A பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கையைப்போல் இரு மடங்காகும். அதன்படி, நாணயக் குற்றியில் A பக்கம் மற்றும் B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகளை வரைபில் உரிய நிரல்களில் நிழற்றிக் காட்டுக.

(23)

| 4 3 8 6 |
|---|

கட்டத்தினுள் உள்ள எல்லா இலக்கங்களை கொண்டு ஆக்கக்கூடிய நான்கு இலக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய எண்ணுடன் 234 ஐ கூட்டினால் கிடைக்கும் விடை யாது? ..................

(24) ஒன்றினிடம் 7, பத்தினிடம் 4, நூறினிடம் 0, ஆயிரத்தினிடம் 9 ஆகவுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.

..........................................................................................................................................................

kalvi.lk


**(25) சிட்டையை அவதானித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.** **சுட்டெண்:-**..............................

| பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| மண்ணெண்ணெய் | $1l\ 500ml$ | 300 | 00 |
| அரிசி | 250g | 60 | 00 |
| துணி | 50cm | 150 | 00 |

(i) $500ml$ மண்ணெண்ணெயை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? ..............................

(ii) 1m துணியையும் 1kg அரிசியையும் வாங்கத் தேவையான மொத்த பணம் எவ்வளவு? ..............................

(26) கடையொன்றில் 6 முட்டைகள் வீதம் 20 முட்டைக் குவியல்கள் காணப்பட்டன. அம்முட்டைகளை ஒன்றில் 8 வீதம் உள்ள குவியல்களாக ஆக்கினால் எத்தனை முட்டைக் குவியல்களை ஆக்கலாம்? ..............................

(27) 


அருகிலுள்ள செவ்வகத்தின் நீளம், அகலம் என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசம் யாது? ..............................

(28) பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எண் பெயர் | இந்து அராபிய எண் | உரோம எண்குறி |
|---|---|---|
| ஒன்பது | | |

(29) வகுப்பொன்றில் 28 பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் $\frac{1}{4}$ பெண் பிள்ளைகளாவர். அதன்படி, வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..............................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) மாலை நேரங்களில் வானவில் வானில் காணக்கிடைப்பது,
(1) மேற்குத் திசையில் (2) கிழக்குத் திசையில் (3) வடக்குத் திசையில்

(31) சூரிய ஒளியிலிருந்து விற்றமின் D ஐ நாம் பெற்றுக்கொள்ளக்கூடியது,
(1) காலை நேரத்தில் (2) மாலை நேரத்தில் (3) பகல் நேரத்தில்

(32) எமது உடலில் அயடின் குறைபாட்டால் ஏற்படும் நோய்,
(1) கண்நோய் (2) கொப்பளிப்பான் (3) கண்டமாலை

(33) தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் பூக்கும் பூவொன்று,
(1) முள்முருங்கை (2) கொன்றை (3) கடுபுல்

(34) நீரில் ஊற்றினால் நீரின் மீது மிதக்காதத் திரவம்,
(1) மண்ணெண்ணெய் (2) வினாகிரி (3) தேங்காயெண்ணெய்

(35) பயிர்களைச் சேதப்படுத்தும் பிராணிகள்,
(1) மயிர்க்கொட்டி, நத்தை (2) தேனீ, வண்ணத்துப்பூச்சி (3) அந்துப்பூச்சி, குளவி

(36) "வாந்திபேதி" நோய் பரவக் காரணமான பூச்சியினம்,
(1) நுளம்பு (2) மின்மினிப்பூச்சி (3) வீட்டு ஈ

(37) அரச இலச்சினையில் சூரியனைக் காணக்கிடைப்பது,
(1) அரச இலச்சினையின் இடதுப் பக்கத்தில் (2) அரச இலச்சினையின் வலதுப் பக்கத்தில்
(3) அரச இலச்சினையின் சரிநடுவில்.

(38) "அரம்" எனும் உபகரணம் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பமொன்று,
(1) துருவலையைத் தீட்டுவதற்கு (2) மெல்லிய கம்பியொன்றை வெட்டுவதற்கு (3) மட்பாண்டங்களை செய்வதற்கு

(39) சூரியகாந்திப் பூ பூப்பது,
(1) சூரியன் மறையும்போது (2) சூரியன் உதிக்கும்போது (3) இரவு நேரத்தில்

(40) தோல் அதிர்வதன் மூலம் ஒலி எழுப்பப்படும் சங்கீத உபகரணங்கள்,
(1) சல்லாரி, கைத்தாளம் (2) வயலின், சித்தார் (3) தவில், மேளம்

(41) பூரண பௌர்ணமி தினம் கிடைப்பது, அமாவாசை தினத்திலிருந்து,
(1) 7 நாட்களுக்கு பின்பாகும். (2) 14 நாட்களுக்கு பின்பாகும். (3) 28 நாட்களுக்கு பின்பாகும்.

(42) இலைகளில் பூக்கள் பூக்கும் தாவரம்,
(1) கடுபுல் (2) தாமரை (3) ஓகிட்

(43) தென் மாகாணத்தில் அமைந்துள்ள புனித நகரம்,
(1) மிஹிந்தலை (2) கதிர்காமம் (3) கண்டி

(44) இலங்கை நாணயத் தாள்கள் அனைத்திலும் இருவர் கையொப்பங்கள் இடுவார்கள். அவர்களில் ஒருவர் நிதியமைச்சர் ஆவார். அதன்படி, கையொப்பம் இடும் மற்றைய நபர்,
(1) மத்திய வங்கியின் ஆளுநர் (2) பிரதம மந்திரி (3) ஜனாதிபதி

kalvi.lk


(45) செவிகளின் ஊடாக மாத்திரம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஊடகங்கள்,
(1) கணினி, செய்தித்தாள் (2) தொலைக்காட்சி, சுவரொட்டி (3) வானொலி, ஒலிபெருக்கி

(46) ஒரு குறிப்பிட்ட பிரதான தபால் நிலையத்தில் மூன்று நிறங்களில் மூன்று தபால் பெட்டிகள் காணப்பட்டன. அந்த மூன்று நிறங்களாவன,
(1) நீலம், சிவப்பு, மஞ்சள் (2) சிவப்பு, பச்சை, நீலம் (3) மஞ்சள், கறுப்பு, கபிலம்

(47) ஊசித்துளைக் கமராவில் தோன்றும் விம்பத்தின் இயல்பு,
(1) அதே மாதிரியான விம்பம் தெரியும். (2) கிடையான விம்பம் தெரியும். (3) தலைகீழான விம்பம் தெரியும்.

(48) கிழங்குப் பயிர்கள் பெரும்பாலும் சேதத்தை ஏற்படுத்துவது,
(1) பன்றி, எலி (2) அட்டை, மர அணில் (3) கறையான், முசிறு

(49)

A சந்தர்ப்பம்

B சந்தர்ப்பம்

உலர் மின்கலத்திற்குச் செப்புக் கம்பியின் மூலம் மின்குமிழ் ஒன்றை இணைக்கப்பட்டுள்ள இரு சந்தர்ப்பங்கள் மேலே காட்டப்பட்டுள்ளன. அதன்படி, A, B ஆகிய இரு சந்தர்ப்பங்களின்படி, பின்வரும் கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) A சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிராது. B சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிரும்.
(2) A சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிரும். B சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிராது.
(3) இரு சந்தர்ப்பங்களிலும் மின்குமிழ்கள் ஒளிரும்.

(50) அரச இலச்சினையில் காணக்கிடைக்காதது,
(1)  (2)  (3) 

(51) இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ளது,
(1) கிழக்கு மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில் (3) மத்திய மாகாணத்தில்

(52) மின்காந்தமொன்றின் கவரும் தன்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டியது,
(1) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். (2) நீளம் கூடிய இரும்பு ஆணியொன்றைப் பயன்படுத்தல்.
(3) நீளம் குறைந்த செப்புக் கம்பியொன்றைப் பயன்படுத்தல்.

Education கல்வி

(53) பாடசாலைகளுக்கு அருகில் காணப்படும் வீதிச் சமிக்ஞை,
(1)  (2)  (3) 

(54) 
சூரிய நமஸ்கார பயிற்சியின் ஆரம்ப சந்தர்ப்பத்தை இவ்வுரு காட்டுகின்றது. அதன்படி, இச்சந்தர்ப்பத்திற்கு அடுத்துவரும் சந்தர்ப்பம்,
(1)  (2)  (3) 

(55) ஆறு இதழ்களைக் கொண்ட பூ வகை,
(1) நாகலிங்கம் (2) நாக மலர் (3) அலரி

(56) நோய்க்காவி நுளம்பு கடிப்பதால் நமக்கு ஏற்படக்கூடிய நோய்,
(1) சின்னமுத்து (2) யானைக்கால் நோய் (3) கொலரா

(57) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவு வகைகளை அதிகளவில் உட்கொண்டால் ஏற்படக்கூடிய நோய்,
(1) இதய நோய் (2) நீரிழிவு (3) சீதபேதி

(58) ஒளியை விரும்பும் பிராணிகள்,
(1) நத்தை, கறையான் (2) எலி, தேள் (3) அந்துப்பூச்சி, ஈசல்

(59) இலங்கையின் தேசிய கீதத்தின் முதல் வரி,
(1) நம் சிறீ லங்கா (2) சிறீ லங்கா தாயே (3) நமோ நமோ நமோ நமோ தாயே.

**(60) "நாதன் காலையில் தனியாக பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடந்து கொண்டிருந்தபோது பெறுமதிமிக்க தங்க மாலை ஒன்றை கண்டு எடுத்தான். நீங்கள் நாதன் என எண்ணி அடுத்து நடந்த நிகழ்வுகளைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

(3) ..................................................................................................................

kalvi.lk